# யாழ் மாநகரசபை எல்லைக்குள் போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்க்க புதிய ஒழுங்குவிதிகள்

யாழ்நகரின் போக்குவரத்து நெருக்கடிகளை தவிர்ப்பது குறித்து யாழ். மாநகரசபையினரால் நேற்றைய தினம் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. நகரின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்திற்கு மாநகர ஆணையாளர் திரு. வீ. பி. பாலசிங்கம் தலைமைதாங்கினுர். இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விக்டோரியா வீதி மணிக்கூட்டு வீதி சந்தியில் இருந்து பஸ்நிலையம் வரையுள்ள வீதி ஒருவழி பாதையாக்கப்பட்டுள்ளது. இவ்வீதியினுடாக எவ்வித வாகனங்களும் பஸ் நிலையத்தை நோக்கி செல்ல முடியாது பஸ்நிலையத்தில் இருந்து வெளியேறும் சகலவாகனங்களும் இதனுடாக செல்லும். கஸ்தூரியார் வீதியினுடே இரு சில்லு வாகனங்கள் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படும். ஒருவழிப் பாதையான இவ்வீதியில் லொறிகள் பொருட்களை இறக்குவதற்கு சில நேரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. — 6 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் ஆறு    விலை ரூபா: 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 43 திங்கள் 19-03-1990 (பங்குனி 06) ஷஃபான் 21

# 22-ல் குடாநாட்டு இறுதிபடை வாபஸ்

# மாதமுடிவில் மாகாணசபை கலைப்பு

யாழ். குடாநாட்டின் கடைசி அணியான காங்கேயன்துறை துறைமுகத்தில் தங்கியுள்ள இந்தியபபடை அணி எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை இந்தியா திரும்பும் என்றும் திருமலையிலிருந்தும் இறுதி அணி விலகும் போது அதற்கு தாமே தலைமைதாங்கவுள்ளதாகவும் இந்தியப் படைகளின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கல்கட் நேற்று திருமலையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இலங்கையில்நடந்த போரில் இந்தியப்படை ஜவான்கள் சுமார் ஆயிரம் பேர் இறந்தனர். மூவாயிரம் பேர் காயமடைந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரு வருடங்களில் இந்திய இராணுவம் இலங்கைப்படைகளுடன் எந்தவித முரண்பாடுகளிலும் ஈடுபடவில்லை எனவும் கல்கட் தெரிவித்தார்.

இதேசமயம் வடக்கு கிழக்கு மாகாணசபை இம்மாத முடிவில் கலைக்கப்படவுள்ளது எனத் தெரியவருகிறது. இலங்கை அரசு சட்டப் பிரச் —6 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளே



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன
தமிழ்ச்சேவைப் பணிப்பாளர்
வீ. ஏ. திருஞானசுந்தரம்
முரசொலிக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டி
4-ஆம் பக்கத்தில்

## கொழும்பு பி.பி.ஸி நிருபர் அறையில் தீ!

நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள பி பி. ஸி நிருபர் கிறிஸ் நட்டால் தங்கியிருந்த ஹோட்டல் அறை திடீரென தீப்பற்றிக் கொண்டது

காலை பத்துமணியளவில் தீ அறையில் பரவியதாகவும் அ —6 ஆம் பக்கம் பார்க்க

# 6 மாத சம்பளத்தை அரச ஊழியர் கஷ்ட நிவாரணக் கடனுக பெறுவர்

அரச ஊழியர்கள் ஒரே தடவையில் கஷ்ட நிவாரண கடனுக ஆறுமாத கால சம்பளத்தை பெறுவதற்கான திட்டம் ஒன்று உருவாகியுள்ளது. மார்ச் மாதம் முதல் இந்தக் கடன் திட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

நிதிப்பிரச்சனையால் கஷ்டப்படும் அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கவே இப்புதிய திட்டம் அரச சேவையில் உள்ள நிரந்தர தற்காலிக ஊழியர்கள் அனைவரும் இக்கடனை பெறமுடியும்.

ஒய்வூதியமுடனுன ஐந்து வருடகாலத்திற்கும்மேற்பட்ட — 6 ஆம் பக்கம் பார்க்க

## அல்வாயில் அஞ்சலிக் கூட்டம்

(வடமராட்சி)

இன்று மாலை அல்வாய் தெற்கு தில்லையம்பலப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்தாண்டு பருத்தித்துறையில் நிகழ்ந்த மோதலில் உயிர்நீத்த ரேசா சாள் கரி,பவான் ஆகியோருக் — 6 ஆம் பக்கம் பார்க்க

## தீவுப்பகுதிக்கு மருந்துவகைகள்

(காவலூர்)

காவலூர் மாவட்ட வைத்தியசாலை,வேலணை கிராமிய வைத்தியசாலை என்பவற்றிற்குரிய மருந்து வகைகளை சுகாதார திணைக்களம்அனுப்பி வைத்துள்ளது.

நீண்டகாலமாக தீவுப்பகுதி ஆஸ்பத்திரிகளில் மருந்துகள் தட்டுப்பாடு நிலவியது குறிப்பிடத்தக்கது (24)

# மேலதிகநேர வேதனம் தராமையைக்கண்டித்து யாழ்உதவி வைத்திய அதிகாரிகள் சட்டப்படிவேலை

யாழ் மாவட்டஉதவி வைத்திய அதிகாரிகள் (ஆர்.எம்.ஓ) சங்கம் அடுத்தமாதம்முதலாம் திகதிமுதல் சட்டப்படிவேலை செய்யத் தீர்மானித்துள்ளனர்.

பிற மாவட்டங்களில் வழங்கப்படும் மேலதிக நேரத்திற்கான கொடுப்பனவுகள் அதே அடிப்படையில் யாழ்மாவட்டத்திற்கும் வழங்கப்படாமையைக் கண்டித்தே மேற்படி சங்கம் சட்டப்படிவேலை செய்வதெனத் தீர்மானித்துள்ளனர்.

இதன்படி காலை எட்டுமணி முதல் பன்னிரண்டு மணிவரையும் பிற்பகல் இரண்டு மணி முதல் நான்குமணிவரை மட்டுமே தம்மருத்துவப்பணியைச் —6 ஆம் பக்கம் பார்க்க

# வடகிழக்கில் ஆயுதப் போராட்டத்தை அடக்கவே ஜே. ஆர் இந்தியப்படையை அழைத்தார்

வடக்கு கிழக்கு ஆயுதப் போராட்டத்தை அடக்கவே முன்னுள் ஜனுதிபதி இந்தியப் படையை அழைத்தார். எனினும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணி சரியாக நிறைவேறவில்லை தாக்குதல்கள் தொடங்கின இந்தியப்படையினர் கொல்லப்பட்டனர் வடகிழக்கு வாழ்மக்களும் உயிரிழந்தனர், இவ்வாறு நேற்று ஜனுதிபதி பிரேமதாஸ ஆனமடுவயில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்,

வெளிநாட்டுப்படைகள் இங்கிருப்பதை நான் ஆரம்பத்தில் — 6 ஆம் பக்கம் பார்க்க

# மட்டுமாவட்ட வீதிஒழுங்குகள் பொலிஸாருக்கு புலிகள் உதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் போக்குவரத்திற்கான ஒழுங்குகளை கண்காணிப்பதில் இலங்கைப் பொலிஸாருடன் விடுதலைப்புலிகளும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்தமுதலாம் திகதிமுதல் இலங்கைப் பொலிஸார் போக் — 6 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 55 கிராம சேவகர் வெற்றிடம்

யாழ்மாவட்டத்தில் புதிதாகப் பிரிக்கப்பட்ட 208 கிராம சேவையாளர் பிரிவில் ஐம்பத்திஐந்து வெற்றிடங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெற்றிடம் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ளோர் தமது தேவைகளை —6 ஆம் பக்கம் பார்க்க

# மாத்தயா, பாலசிங்கம் வடமராட்சி விஜயம்

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா மாத்தயா கடந்தசனிக்கிழமை நெல்லியடிப் பகுதியிலுள்ள ஆதரவாளர்களைச் சந்தித்து உரையாடினுர்.

இந்தச் சந்திப்பின் போது மக்களின் பிரச்சினைகளைமிகவும் ஆர்வமாகக் கேட்டறிந்த திரு கோ. மகேந்திரராசா கடந்த —6 ஆம் பக்கம் பார்க்க

# வல்வெட்டித்துறையில் நிலக்கண்ணி வெடிப்பு

வல்வையில் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை ஸ்ரீலங்கா ராணுவத்தினர் வெடிக்க வைத்தனர். இதனையடுத்து அப்பகுதிகளில் சிறிது பதற்றம் நிலவியது எனினும் சிறிது நேரத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது; ஸ்ரீலங்கா ராணுவம் புலிகள் மோதல் ஆரம்பமானதையடுத்து தமது பாதுகாப்பிற்காக இராணுவத்தினர் அப்பகுதிகளில் கண்ணி — 6 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை கடதாசி கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்)

196, கே.கே. எஸ். வீதி

யாழ்ப்பாணம்

எமது நிறுவனத்தில் பலவிதமான திருமண அழைப்பிதழ் அட்டைகள், புதுமனைப்புகுவிழா அழைப்பிதழ் அட்டைகள், விருந்துபசார அழைப்பிதழ் அட்டைகள், அறிமுக அட்டைகள் அடிக்கும் அட்டைகள், பிறந்த தின மற்றும் சுபதின அழைப்பிதழ் அடிக்கும் அட்டைகள், இறக்குமதி செய்யப்பட்ட காகிதாதிகள், எழுது கருவிகள், மின்சார உபகரணங்கள், அச்சகங்களுக்குத் தேவையான வர்ணத் திந்தைகள், மற்றும் இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்யப்படும் சகலவிதமான கடதாசி வகைகள்,மட்டைவகைகள், அவ் பளிப்புப் பொருள்கள் யாவும் பெற்றுக்கொள்ளலாம்.

03163



## A|L PHYSICS

ஆசிரியர்

**R. சத்தியசீலன்**

B.M.C. முன் லேன்

யாழ்ப்பாணம்

A/L 90 Day Classes (Mon–Fri)

8-30 a.m. Sound

9-30 a.m. Electricity

**ஆரம்பம்: 19:03:90**

திங்கள் காலை 8:30 மணி

03157



## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

எனது அடையாள அட்டை 676790101 V 17.03 90 அன்று யாழ்ப்பாணம்-சாவகச்சேரிமினி பஸ்சில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து முரசொலி காரியாலயத்தில் அல்லது கா கேமலதா 241,கச்சாய் வீதி, சாவகச்சேரி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். 031?5

### புத்தகங்கள்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும் விற்கப்படும். புத்தகம் கட்டுபவர் தேவை SENATHIRAJAH Second Hand Book House 13/6 ஸ்ரான்லி வீதி, முரசொலிக்குமுன் கண் சிகிச்சைலேன் யாழ்ப்பாணம். 03160

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினல் அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை போன்றவற்றில் வேலைசெய்பவர்க்கான ஆங்கில வகுப்புக்கள் ஞாயிற்றுக்கிழமையிலும், கிழமைநாட்களில் இரவு நேரத்திலும் நடத்தப்படும். தனிப்பட்டோர்களுக்கான (INDIVIDUAL TUITION) பயிற்சிகளும் அளிக்கப்படும் விபரங்களிற்கு: எஸ். ஜெயராஜா கல்யாணி ஆங்கில கல்வி நிலையம் 204, மானிப்பாய் ரோட், ஓட்டுமடம் யாழ்ப்பாணம் 03058


வேலணை வங்களாவடிப் பகுதிகளில்

# இரவுநேரத் திருட்டுக்கள் பெருமளவில் அதிகரிப்பு

வேலணை வங்களாடியில் உள்ள முருகன் ஆலயத்தில் உள்ள ஒலிபெருக்கியின் விலை உயர்ந்த சாதனங்களும் சாதனங்களுடன் வைக்கப்பட்டிருந்த வேறு பல பொருட்களும் திருடப்பட்டுள்ளன

சென்ற வாரங்களில் வேலணை, மண்கும்பான் கிராமங்களில் உள்ள பல வீடுகளில் தங்கநகைகள், ரொக்கப் பணம் கலியாணவீட்டுக்கென வாங்கிவைக்கப்பட்டிருந்த கூறைச்சேலை, கமரா, துவிச்சக்கரவண்டி என்பன திருடர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதுபற்றி விடுதலைப்புலிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (19)


### பயிற்சி

க. பொ. த (சா. த)பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலை விட்டு விலகியவர்களுக்கான தமிழ்/ஆங்கிலம் சுருக்கெழுத்துத் தட்டச்சுப் பயிற்சி வகுப்புகள் (8 மாதம்) 1.4.90ல் ஆரம்பமாகிறது. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 25 3.90க்கு முன்பு விண்ணப்பிக்கவும் புதிய பந்திரங்களில் பயிற்சியளிக்கப்படும் முகவரி:–செயலாளர், கலைமன்றம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 03159


## வவுனியாவில் எப். எம். ஒலிபரப்பு தெளிவில்லை

வன்னிப்பகுதியில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன எவ், எம ஒளிபரப்புதெளிவில்லாதுள்ளதுசெய்திஅறிக்கையினைத் தெளிவாக கேட்க முடியவில்லை என்று மக்கள்குறைபட்டுக் கொள்கிறார்கள்,

கடந்த இரண்டு வார காலமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது (11)


## கனடாவிற்கான உடனடி பிரயாண ஒழுங்கு

44 வயது மதிக்கத்தக்க ஒரு ஆணும் 40 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணும் 17, 18 வயது மதிக்கத்தக்க இரு பெண்களும் 16 வயது மதிக்கத்தக்க ஒரு ஆணும் கனடா செல்ல உடனடியாக ஒழுங்கு செய்து தரபபடும். மேலும் 55, 48, 24, 19 வயது மதிக்கத்தக்க பெண்களிற்கும் 18 வயது மதிக்கத்தக்க ஒரு ஆணுக்கும் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும். விபரங்களிற்கு மட்டும் 25 ம் திகதிக்கு முன்பாக தினமும் பிற்பகல் 1 மணி முதல் 5 மணி வரை பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

Mr. A. Joseph, 754, Hospital Road, Jaffna.

03143



# “தொழிற் பயிற்சிகள்”

★ **ENGINEERING DRAWING**

பொறியியல் மாணவர்களிற்கு விசேடமாக பயிற்சியளிக்கப்படும்,

★ **DIPLOMA IN DRAUGHTSMANSHIP**

I Building Design

II Construction

III Building Materials

IV Building Quantity

V Engineering Drawing

காலம் 5 மாதம்

★ **COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE**

60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். காலம்:–4 மாதம்.

★ **றேடியோ, ரெலிவிஷன் வீடியோ. டெக் றிப்பயறிங்**

சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக, திருத்தப்படும்முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம் : 4 மாதம்

★ **றீவைண்டிங்**

மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம் 4 மாதம்

★ **எலெக்றிக்கல் வயறிங்**

வீட்டுமின்சாரவேலை,மின்சாரப்பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்

காலம்–: 2 மாதம்

குறிப்பு :-முன்பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து பயில்வதற்கு உடனடியாக நேரில் தொடர்பு எடுக்கவும்.

**பயிற்சிகள் ஆரம்பம்:** 21,03 90 [கிழமைநாட்கள்]
24.03.90 [சனி, ஞாயிறு]

பயிற்சி முடிவில் சித்தியடையும் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்

JAFFNA TECHNICAL INSTITUTE · JTI · SRILANKA

# JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லிவீதி,(றெயில்வேகடவை அருகாமையில்) யாழ்ப்பாணம்

03146 03147



# தமிழீழ ஆய்வு நிறுவனம் மகாநாடு

## ஆய்வும் அபிவிருத்தியும்

தமிழீழ அடிமட்ட பூர்வாங்க வேலை
பங்குனி 24, 25, 1990 களில்

தமிழீழத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் மக்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு வழிவகைகளைக் கண்டறிவது இவ்மகாநாட்டின் அடிப்படை நோக்கம் ஆகும்.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் நிலவுகின்ற உண்மையான அரசியல் நிலை, கலாசார வரலாற்று விடயங்களை கருத்தில் கொண்டு உறுதியான, அர்த்தமுள்ள அபிவிருத்தியை ஏற்படுத்த, நவீன விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் எப்படிப் பயன்படுத்த வேண்டும என இவ்மகாநாடு ஆராயும்.

அடித்தள பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டுள்ள திட்டமிடலாளர்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள், ஆய்வாளர்கள், ஆகியோர் பங்குபற்றுவதை கருவதாக மகாநாடு அமையும். மகாநாடு அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் தேவைகளை எளிதில் கிரகிக்க கூடிய புத்திஜீவிகளையும், கல்விமான்களையும் ஒன்று சேர்த்து தமிழ் பிரதேசங்களில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், உறுதியான அரசியலை கொண்டு வரவும், அர்த்தமுள்ள பிரயோசனமான திட்டங்களை உருவாக்கும்.

சமர்ப்பிக்கப்படும் ஆராய்ச்சிக் கருத்துக் கட்டுரைகள்

- சமூக அபிவிருத்தி – சிறிய கைத்தொழில்களும் குடிசைக் கைத்தொழில்களும்
- சமூகஅபிவிருத்தி – விவசாயம்
- சமூக அபிவிருத்தி – மீன்பிடி
- சமூக அபிவிருத்தி – சக்திபிறப்பிடங்கள்
- சமூக அபிவிருத்தி – சுகாதாரம்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**Programme Secretary**
Root
8, Herm House
Clepane Road
London
N 1-2 TP
Tel: (01) 359 2834

03148


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் அமைதி திரும்பவும் வரும்?!...

"திருமலையில் அமைதி தொடருவது உறுதி'' இவ்வாறு உயர்கல்வி விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

திருமலையில் கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், முப்படைகளின் உயரதிகாரிகள் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னரே அமைச்சர் ஹமீத் இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

இனங்களுக்கு இடையேயான பிரச்சினைகளைப் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் தீர்த்துக் கொள்வது குறித்தும்,

விடுதலைப் புலிகள் - இலங்கைப்படையினர் இடையே மோதல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது ஆகியவை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தியப்படை வெளியேறியதும், திருமலையில் அமைதிநிலையைப் பேணுவது தொடர்பாகவும், பாதுகாப்புத் தொடர்பாகவும் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசிற்கும் இடையே தொடர்ச்சியாகப் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்துள்ளன.

இதிலிருந்து திருமலை நகரின் முக்கியத்துவம் குறித்தும், அங்கு தொடர்ச்சியான அமைதிநிலை பேணப்படவேண்டும் என்பது

## இதயநாதம்

திங்கட்கிழமை 19-03--1990

### நல்வாக்கு

நோயுள்ளவன் அதைப் போக்கும் மருந்தின் பெயரைச் சிந்தித்து வந்தால் என்ன, அதுமட்டுமே அவனுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்து விடுமா?

-பஞ்சதந்திரம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

குறித்தும் இருதரப்பினருக்கும் உள்ள பொறுப்பினையும், கடப்பாட்டினையும் உணர்ந்தே செயற்படுகிறார்கள் என்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்று

ஏற்கனவே கடந்த காலங்களில் திருமலை மாவட்டம் என்பது இரு இனத்தவர்களுக்கும் அச்சம் தரும் பிரதேசங்களாகவே இருந்து வந்துள்ளது.

காலத்திற்குக் காலம் இனங்களுக்கு இடையேயான மோதல்கள் எழுந்த வண்ணமிருந்தன. பாரிய உயிர் உடைமைச் சேதங்கள் ஏற்பட்டன.

எண்பதுகளுக்குப் பின் தமிழ் மக்கள் மேலான வன்முறைகள் கட்டுப்பாடின்றி வெடித்துச் சிதறின.

நகரின் சில பகுதிகளும், தமிழர் பெருமளவில் வாழும் பகுதிகளும் மட்டுமே தமிழரின் போக்குவரத்து, அன்றாடச் செயற்பாடுகளுக்கு உரிய பிரதேசமாகக் குறுக்கப்பட்டன.

திருமலை, கல்முனைத் தேர்தல் தொகுதிகளிலிருந்து சில பிரதேசங்கள் பிரித்தெடுக்கப்பட்டுச் சேருவில என்ற புதிய தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது.

இவற்றின் உச்சமாக நடந்த கலவரங்களினால் திருமலைக் கோட்டை வாசலில் இருந்த பிள்ளையார் சிலை ''பிள்ளையார் கடலில் குளிக்கப் போகிறார்'' என்ற சிங்கள வாசகத்துடன் கடற்கரையில் கொண்டு வந்து போடப்பட்டிருந்தது.

இவ்வாறான ஒரு தேசிய இனத்தின் மீதான அவமதிப்புகளுக்கு எல்லாம் முகம் கொடுத்து தனது இருப்பினைப் போராட்டத்தின் மூலமாக வெளிப்படுத்தியுள்ளது தமிழ்த் தேசிய இனம்.

இன்று அக-புற சூழ்நிலைகளினால் திருமலையில் அமைதி பேண வேண்டிய நிலைக்கு இலங்கை அரசு இட்டுச்செல்லப்பட்டிருக்கிறது.

இந்நிலையிலாவது திருமலையில் தமிழ் பேசும் மக்களது உரிமைகள் மதிக்கப்பட்டு, அவர்கள் ஒரு தேசிய இனமாக வாழ்வதற்குரிய அனைத்து நிலைமைகளையும் இலங்கை அரசு உருவாக்கும் என நம்புகிறோம்.

அது ஒன்று தான் திருமலையில் தொடர்ந்து அமைதியினைப் பேண உள்ள ஒரேஒரு வழிமுறையாகும். அரசு இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

---

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

# மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடுகள் அமைப்பதற்கு கடன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கடன் பெறுபவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேற்படி சபையின் மாவட்ட முகாமையாளர் திரு. கே. பத்மநாதன் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததாவது:-

நகர உப வீடமைப்புத் திட்டத்தின் கீழ்கடன் பெற விரும்புவோர் இம்மாதம் 31 ம் திகதிக்குமுன்பு தமதுவிண்ணப்பப் படிவங்களைப் பெற்று பதிவு செய்துகொள்ள வேண்டும்.

மேற்படி விண்ணப்பங்களை மாநகர சபையில் பெற்றுக் கொண்டு 10 நாட்களுக்குள் பதிவு செய்வதற்காக மீள கையளிக்கவேண்டும் இவர்கள் மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதிவிடத்தைக் கொண்டிருக்க வேண்டும்;

கிராமிய வீடமைப்புத்திட்டத்தின் கீழ் கடன் பெறவிரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம்15 திகதிக்கு முன் கையளிக்க வேண்டும்.

உதவிஅரசாங்க அதிபர் அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கடன்களைப்பெற தகுதியுடையோர் வயதுஎல்லை 18—50 ஆகும். குடும்ப வருமானம் 701 ரூபாவிலிருந்து 2400 ரூபா வரையாகும்.

இக்கடன்களைப் பெறுவோர் எந்தவொரு அமைப்பின் சிபார்சோ தனிப்பட்ட நபரின் சிபார்சோ தேவையில்லை. படிவங்களை பெற்று பதிவு செய்தால் பதிவு செய்யப்பட்ட அடிப்படையில் கடன் வழங்கப்படும்.

ஏற்கனவே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தேசிய வீடமைப்புத் திணைக்களம், புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வீடமைப்பு நிவாரணம் பெற்றவர்கள் கடனுதவி பெறதகுதியற்றவர்கள் என அவர் தெரிவித்தார். (05)

## வவுனியாவில் தாயக இராகங்கள் கதம்ப விழா

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட கலைகலாசார குழு நடாத்தும் 'தாயக இராகங்கள் கதம்பவிழா ஏப்பிரல் 16-ம் திகதி திங்கட்கிழமை தமிழ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

களத்தில் காத்தான் வில்லிசை நிகழ்ச்சியும், வவுனியா பரதசூடாமணிகலையகம் வழங்கும் பரதநாட்டிய நிகழ்ச்சியும் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெறவுள்ளது. (11)

தமிழீழ ஆய்வு நிறுவன ஆதரவில்

# பொருளாதார அபிவிருத்தி பற்றி லண்டனில் மகாநாடு

லண்டன் தமிழீழ ஆய்வு நிறுவனம் (Root) 'ஆய்வும் அபிவிருத்தியும்' என்னும் தொடரில் மகாநாடொன்றை இம்மாதம் 24-ம் 25-ம் திகதிகளில நடாத்தவுள்ளது.

தமிழீழத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் மக்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு வழி வகைகளைக் கண்டறிவது இம்மகாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

பாரம்பரிய பிரதேசத்தில் நிலவுகின்ற உண்மையான அரசியல் நிலை, கலாசார வரலாற்று விடயங்களைக் கருத்தில் கொண்டு உறுதியான அர்த்தமுள்ள அபிவிருத்தியை ஏற்படுத்தி நவீன விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் எப்படி பயன் படுத்த வேண்டுமென இம்மகாநாட்டில் ஆராயப்படும்.

1984 ம்ஆண்டுநிறுவப்பட்ட Root நிறுவனம் தமிழ்ப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பொருளாதார அழிவுகளை சீர் செய்வதற்கான பூர்வாங்கதிட்டமொன்றை தயாரிக்கும் வேலையில்கூடியகவனமெடுத்து செயற்பட்டு வருகின்றது.

# நிதியுதவி ஸ்தாபன பிரதிநிதிகள் வடக்கே விஜயம்; நிலைமை சீராகி வருவது குறித்துஅவர்கள் மகிழ்ச்சி

கிராமிய தற்சார்பு வளர்ச்சித் திட்டத்தை யாழ்-கிளிநொச்சி மாவட்டங்களில் பின்தங்கிய ஐம்பது கிராமங்களில் ஊற்று நிறுவனம் அமுல் செய்துவருகிறது. திட்டத்தைப் பார்வையிடுவதற்கும் கிராமிய மக்களின் பிரச்சினைகளை நேரில் கேட்டறிவதற்குமாக ஐக்கிய அமெரிக்க நிதியுதவி ஸ்தாபனத்தின் நான்கு அதிகாரிகள் அண்மையில் பத்துக்கிராமங்களை உள்ளடக்கிய குடத்தனைக் கொத்தணிக்கு விஜயம் செய்தனர். கிராமத்தையும், மக்களின் தொழில் முயற்சிகளையும், சவுக்கு மர வளர்ப்புத் திட்டத்தையும் அவர்கள் அங்கு பார்வையிட்டனர்.

குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பிரதிநிதிகளையும், ஊற்று நிறுவனத்தினரையும் வரவேற்றுப் பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டது. செல்வி உமா ஆங்கிலத்தில் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து குடத்தனை தற்சார்பு வளர்ச்சிக் கழகத் தலைவர் சு. சிவகணேசன் கழக செயற்பாட்டு அறிக்கையையும், கிராமிய மக்களின் பிரதான கோரிக்கைகளையும் சமர்ப்பித்தார்.

கழகத்தினால் அமுல் செய்யப்படும் சுழற்சி முறைக் கடன் திட்டத்திற்கு அதிக நிதி வழங்குதல் வடமராட்சி கிழக்குப் பிரதேச அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் பருத்தித்துறை-மருதங் கேணி வீதியை அரசாங்கத்தோடு தொடர்புகொண்டு காலதாமதமின்றி திருத்துவித்தல் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுப் பின் இடை நிறுத்தப்பட்ட சவுக்கு மர வன வளர்ச்சித் திட்டத்தை பாரிய அளவில் விஸ்தரித்தல். வடமராட்சி உவர் நீர் ஏரியை நன்னீராக மாற்றும் திட்டத்தை மேற்கொள்ளுதல், சிறார்கள் கல்வி வளர்ச்சிக்காகப் பாடசாலையைத் தரமுயர்த்தி. தளபாடம், விஞ்ஞான ஆய்வு கூடம் முதலியவற்றை வழங்க உதவி செய்தல். வன் செயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட தொழில் ஊக்குவிப்பு, நிவாரணக் கொடுப்பனவுகளைக் காலதாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுத்தல். சிறு குளங்கள், சிறு வீதிகள், புனரமைப்புத் திட்டத்தின் நிர்மாண வேலைகளைக் கழகங்கட்குக கொடுத்து மக்களைப் பங்கேற்பதற்கு ஊக்குவித்தல் ஆகிய முக்கிய கோரிக்கைகள் அங்கு சமர்ப்பிக்கப்பட்டன.

திரு. எட்வேட் கிளாசியர் பதிலுரையின்போது வாஷிங்டனில இருந்து திட்டத்தைப் பார்வையிடுவதற்கும், மேலும் எப்படிப்பட்ட வழி முறைகளில் கிராமங்களில் அபிவிருத்திக்கு அமெரிக்க அரசாங்கம் உதவி செய்ய முடியும் என்பதை ஆராய்வதற்காகவும் தான் வந்திருப்பதாகக் கூறினார். மக்கள் இப்பொழுது சுதந்திரமாக நடமாடுவதுபற்றித் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் ஆறு மாதங்கட்கு முன்பிருந்த நிலை முற்றாக மாறிவிட்டதைத் தங்களால் அவதானிக்க முடிகின்றது என்றும் குறிப்பிட்டார். இளைஞர்கள் கழகங்கள் மூலமாகத் தற்சார்பு வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைப்பதையிட்டுமிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினார்.

திருமதி பாமிலா பல்விஸ் மழலைத் தமிழில் ஆரம்பத்தில் உரையாற்றினார். தான் புனருத்தாரண வேலைகட்குப் பொறுப்பான அதிகாரி என்று தெரிவித்தார். யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்து மக்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து நிவாரணக் கொடுப்பனவுகளைத் துரிதப் படுத்துவதற்குரிய வழிகளைக் கையாளப்போவதாகக் கூறினார். மக்கள் அப் பணத்தைப் பெற்று தொழில் முயற்சியில் ஈடுபட்டு வருமானத்தைப் பெருக்க வேண்டுமேயொழிய வீண் செலவு செய்யக் கூடாதென்றும் வேண்டிக் கொண்டார். வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவங்களைக் அவர்கள் கேட்டறிந்தனர் கிராமியமக்களோடுஉரையாடி அவர்களின் பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்ததையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தனர்

## கொடித்தினம்

செஞ்சிலுவைச் சங்கம்தனது கொடிதினத்தை நாடு முழுவதும் இம்மாதம் 27ம் திகதி கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது இந்தக் கொடித் தினத்தை சிறப்பான முறையில்நடத்துவதற்கு யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கமும் ஏற்பாடுகளைச் செய்து வருவதாக யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்க தலைவர் வைத்திய கலாநிதி ஆர் தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பொறுப்பாளர் சுரேஷ்உரை:

# மொழிப்பற்றை ஆசிரியர்கள் மாணவருக்கு புகட்ட வேண்டும்

மன்னார் மாவட்டம் போராட்டத்தில் முன்னணியில் திகழ்கின்றது. நான் தலைவர் பிரபாகரனை அண்மையில் சந்தித்தபோது மன்னார் மாவட்டம் கல்வியில்பின் தங்கி உள்ளது என்றார். இன்று அந்நிலைமை மாறி மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மன்னார் மண்ணிலேயே பிறந்தமுந்நூறு பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு மன்னார் மாவட்ட பயிலுநர் ஆசிரிய நியமனம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகள்மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் சுரேஷ் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், 'ஆசிரியர் மாணவர்களுக்கு இன்றைய காலத்தின் தேவையையொட்டிக் கற்பிக்க முன்வரவேண்டும்;மாணவர்கள் மனதில் வீரம், மண் வாசனை, தாய்நாட்டுப்பற்று, மொழிப்பாற்று ஆகியவற்றை வளர்க்க முன்வர வேண்டும்.

'பாடசாலை சம்பளம் வீடு என்றில்லாமல் ஆசிரியர்கள் கடமையுணர்வுடன்செயற்பட வேண்டும். தூர இடங்களுக்கு நியமிக்கப் பட்டிருக்கும் ஆசிரியர்கள் இதனை ஒரு சவாலாக ஏற்றுக்கடமையாற்றுவார்கள் என நான் நம்புகின்றேன். கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் அவர்கள் மன்னார் மாவட்டத்திற்கு வந்த பின்னர் தான் இம்மாவட்டம் கல்வியிலேயே வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது' எனக் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் முரசொலிக்கு வழங்கிய செவ்வி ★

# தொலைக்காட்சி ஆக்கிரமிப்பால் வானொலிக்குப் பாதிப்பா?!...



"உங்களுக்கு அறிவிப்பாளராகும் ஆசை உண்டா? உங்கள் குரலை தொடர்ந்து இரண்டு நிமிடத்திற்கு மேல் கேட்க முடியாது என்று நீங்கள்கருதினால் அறிவிப்பாளராகும் ஆசையை கைவிட்டுவிடுங்கள்"

பேட்டி கண்டவர்

**வி.என்.எஸ்.உதயசந்திரன்**

எமது பத்திரிகை அலுவலகத்திற்கு இலங்கை வானொலியைப் பற்றியும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகளிடம் கேட்கவேண்டிய வினாக்களையும் உள்ளடக்கிய பல கடிதங்கள் வருகின்றன. வாசகர்களின் வினாக்களுக்கு விடையளிக்க விரும்பிய நாம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவைப் பணிப்பாளரான திரு. வீ. ஏ. திருஞானசுந்தரம் அவர்களைச் சந்திக்க விரும்பினோம்.

தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அன்பாகப் பேசிய அவர் முரசொலிப் பத்திரிகைக்குப் பேட்டிதர சம்மதித்தார். உடனடியாகவே அவரைப் பேட்டிகாணும் வாய்ப்பு எமக்குக்கிடைக்கும் என எதிர்பார்க்கவில்லை 'என் அருகில் இருந்த நண்பர் சொன்னார் பத்திரிகையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றியவர் அவர்' பத்திரிகையாளரை அன்போடு அணைப்பவர் என்றார்.

தமிழ்ச்சேவைப் பணிப்பாளரை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நேரத்திற்கு அவரைச் சென்று சந்திக்க முடியவில்லை. சற்று தாமதமாகச் சென்றபோது எனது உள்மனம் படபடக்கத்தான் செய்தது... பேட்டி தர மறுத்து விடுவாரோ...? என் மனம் நினைத்ததற்கு எதிர்மாறாக ... அதற்கென்ன பறவாயில்லை... என்று கூறி அன்போடு என்னை அழைத்தார்.

இச்சம்பவம் மற்றவர்களை 'பண்போடு வரவேற்கும் பாங்கிற்கு உதாரணமாகும்'

1984-ம் ஆண்டிற்குப் பின்னர் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இலங்கை வானொலியைக் கேட்போர் மிக மிகக் குறைவாகவே இருந்தனர். வடபகுதிக் கலைஞர்கள் வானொலி நிகழ்ச்சிகளில் ஆர்வம் காட்டுவதைக் குறைத்துக் கொண்டனர், வானொலிக்கு பிரதிகள் எழுதுவோர் தொகையை விரல்விட்டு எண்ணிவிடலாம். இந்த நிலையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையை இயங்கச் செய்த பெருமை பணிப்பாளர் திரு. வீ. ஏ. திருஞானசுந்தரம் அவர்களையே சாரும்.

சுதந்திரமாக தமிழ்ச்சேவை இயங்க முடியாத நிலை 1984க்குப் பின்னர் இருந்து வந்ததை யாவரும் அறிவர். தமிழர்களின் போராட்டம் வலுப்பெற்றிருந்ததால் தமிழ் கலைஞர்கள் பலர் சுதந்திரமாக நிகழ்ச்சிகளில் பங்குபற்ற முடியவில்லை. வானொலியில் தமிழர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழந்துவிட்டனர் இவை நடந்து முடிந்த பழையகதை.

இப்போது நாட்டில் அமைதி மெல்ல மெல்ல வந்து கொண்டிருக்கின்றது, எனவே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை நிகழ்ச்சிகளிலும் மாற்றம் ஏற்படுமா? புதிய கலைஞர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்குமா? தமிழ்ச்சேவை நிகழ்ச்சிகளை வடக்கு கிழக்குப் பகுதிகளில் தெளிவாகக் கேட்கக்கூடிய நிலை ஏற்படுமா? திறமையுள்ளவர்கள் தமிழ்ச்சேவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்குமா? என்ற வினாக்கள் வானொலி நேயர்களிடம் எழுந்துள்ளன.

இவ்வினாக்களை பணிப்பாளரிடம் முன்வைத்தவாறு பேட்டியை மெல்ல ஆரம்பித்தேன். புன்சிரிப்புடன் கணீர் என்ற குரலில் பேச ஆரம்பித்தார். அவரது குரலில் இனிமையும் இளமையும் தெரிந்தது.

"தமிழ்ச் சேவையில் விரைவில் புதிய நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்ய எண்ணியுள்ளோம் திறமையான கலைஞர்களை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றச் செய்ய கலைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரி தற்போது நாடகக் கலைஞர் தேர்வையும் நடத்தியுள்ளோம். இது போன்று மிருதங்கம், வயலின், சங்கீதம் போன்ற நுண்கலைத்துறையைச் சேர்ந்த கலைஞர்களையும் தெரிவுசெய்ய விண்ணப்பங்களைக் கோரியுள்ளோம்.

தற்போது புதிய பகுதிநேர அறிவிப்பாளர்களை தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. திறமையுள்ளவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்பதே எமது நோக்கம்.

"வானொலியில் திறமை அற்றவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கினால் அதனால் பாதிக்கப்படுவது சமுதாயம் தான். ஒரு அறிவிப்பாளர் பிழையாக உச்சரிக்கின்றார் என்றால் அதனைப்பார்த்து சிறுவர்களும் பிழையாக உச்சரிக்கத் தொடங்கி விடுவார்கள் ஏன் இப்படி உச்சரிக்கின்றாய் இது பிழையல்லவா? வானொலியில் இப்படி உச்சரிக்கப்படுகிறது - இதுதான் சரிஎன்பான். எனவே திறமையற்றவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கும் போது எமது சமுதாயத்திற்கு துரோகம் செய்கிறோம் என்பதை மறந்து விடக் கூடாது என்றார்.

வடபகுதி நேயர்கள் வானொலியைத் தெளிவாகக் கேட்க முடியவில்லை என்று கூறுவது எம் காதுகளிலும் விழத்தான் செய்கின்றது. மண்டைதீவில் உள்ள வானொலிக்கருவிகளுக்கு என்ன நடந்தது என்பதை வாசகர்கள் அறிவார்கள். மண்டைதீவு நிலையம் இயங்க முடியாததாலேயே இந்தநிலை. தமிழ் ஒலிபரப்புதான் இப்படி என்று நினைத்து விடாதீர்கள். சிங்கள ஒலிபரப்பை கம்பஹாவில் தெளிவாகக் கேட்க முடியாது. ஆங்கில ஒலிபரப்பை மொறட்டுவையில் தெளிவாக கேட்க முடியவில்லை.

ஆசிய நேயர்களுக்கு என ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சி மட்டும் எப்படித் தெளிவாகக் கேட்கிறது?

இந்த ஒலிபரப்பைப் புத்தளத்தில் உள்ள T.W.R. என்ற சமய நிறுவனத்திற்குச் சொந்தமான தனியார் ரான்ஸ்மீற்றர் மூலம் அவர்களிடம் குறிப்பிட்ட நேரத்திற்குப் பணத்தைச் செலுத்தியே ஒலிபரப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் ஒலிபரப்பை மேற்கொள்வது என்றால் பெருமளவு பணம் செலவாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ரான்ஸ்மீற்றர்கள் 40 வருடங்கள் பழமையானவை. இந்தப் பழைய கருவிகள் மூலம் ஒலிபரப்பை மேற்கொள்வதே ஒரு சாதனைதான்.

வானொலியில் ஒலிக்கும் நாடகங்கள் பெரும்பாலும் ஒரு சிலருடைய ஆக்கங்களாகவே இருக்கின்றன என்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என்று கேட்டதற்கு:

"பிரதிகளை ஒரு சிலரே தொடர்ந்து எழுதுகின்றனர். எமக்கு வரும் பிரதிகள் மிக மிகக் குறைவு அப்படிப் பிரதிகள் வந்தாலும் திருத்தம் செய்து பிரசுரிக்க முடியாதவையாகவே இருக்கின்றன. இந்த நிலையில் ஒரு சிலருடைய ஆக்கங்கள் தொடர்ந்து ஒலிபரப்பாவது தவிர்க்க முடியாதது. நேயர்களால் மட்டும் தான் இக் குறையை நீக்க முடியும். தரமான பிரதிகள் கிடைத்தால் நிச்சயமாக அவை ஒலிபரப்பாகும்.

வட பகுதியில் அடிக்கடி நூல் வெளியீடுகள், அரங்கேற்றங்கள், கவியரங்கங்கள், பட்டிமன்றங்கள், கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. ஆனால் கொழும்பில் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றால் அவை வானொலியில் கலைக்கோலம் போன்ற நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பாகின்றன.

வசதியுள்ள வடபகுதி நூல் வெளியீட்டாளர்கள் தமது நூல் பற்றிய விமர்சனங்கள் வானொலி, ரூபவாகினி ஆகியவற்றில் இடம்பெற வைக்க வேண்டும் என்பதற்காகவே கொழும்பில் வெளியீட்டு விழாவை ஏற்பாடு செய்கின்றனர். வசதியற்ற நூல்வெளியீட்டாளர்களுடைய நூல்கள் பற்றி வெளியுலகிற்குத் தெரிய முடியாமல் போகின்றன.

வடபகுதியில் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சிகள் வானொலியில் ஒலிபரப்பாக உங்களது புதிய திட்டத்தில் ஏதாவது ஏற்பாடுகளைச் செய்துள்ளீர்களா?

இவ் வினாவிற்குத் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திரு. வீ. ஏ. திருஞானசுந்தரம் பதிலளிக்கையில், இது பற்றி நானும் சிந்தித்துப் பார்க்காமல் இல்லை. விரைவில் வடபகுதி இலக்கிய ஆவலர்களின் குறையையும் தீர்த்துவைக்க முடியும் என நினைக்கின்றேன்.

திறமை உள்ளவர்களை அழைத்துக் கௌரவிக்க என்றும் தமிழ்ச்சேவை தயாராக இருக்கிறது. இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தான் கலைஞர்களைத் தேடிச் செல்கின்றது. ஆனால் கலைஞர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனங்களை நோக்கி வருவதில்லை.

கொழும்பு நகரில் நடைபெறும் விழாக்கள் ... ஏனென்றால் நல்ல கலைஞர்களை தேடிக் கலையகத்திற்கு அழைத்து வருவதற்காகவே கடந்த சில ஆண்டுகளாகக் கலைஞர்களைத் தேடுவதில் நாம் பட்ட கஷ்டங்களை இலகுவில் வார்த்தைகளால் சொல்லிவிடமுடியாது என்று வேதனையோடு தெரிவித்தார்.

தமிழ்ச் சேவையில், இலக்கிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருக்கிறோம். இது இலக்கிய ஆவலர்களுக்கு மட்டுமல்ல உயர்தர மாணவர்களுக்கும் பயன்படும் நிகழ்ச்சிகளாகும் என்றார்.

இலங்கையில் வெளியாகும் தமிழ்ச் 'சஞ்சிகைகளைப் பற்றி விமர்சனங்களை இலக்கிய நிகழ்ச்சியில் ஒலிபரப்புவீர்களா?

தரமான சஞ்சிகைகள் எதுவாக இருந்தாலும் அவை எமது கைகளுக்குக் கிடைத்தால் அதுபற்றிய விமர்சனம் நிச்சயம் ஒலிபரப்பாகும்.

சஞ்சிகைகளை வெளியிடுவோர் எனது முகவரிக்கு அதன் இரு பிரதிகளை அனுப்பி வைத்தால் அதன் தரங்கண்டு அதுபற்றிய விமர்சனத்தை ஒலிபரப்புவோம்.

தமிழ்ச் சேவை ஒன்று, இரண்டு என இரண்டு சேவைகள் நடத்தப்பட்டது இப்போது இரண்டு சேவைகளும் ஒன்றாக்கப்பட்டுவிட்டது. மீண்டும் இரண்டாக்க மாட்டீர்களா? என்று கேட்டதற்கு இதுபற்றி நாம் மேலதிகாரிகளிடம் கூறியிருக்கின்றோம் என்று பதில் தந்தார்.

"இப்போதைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிர்வாகம் எனக்குப் புதிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பவும், நேரடி அஞ்சல்களைச் செய்யவும் அனுமதியளித்திருக்கின்றது.

எனவே எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை நாம் எப்படியோ பயன்படுத்தி வருகின்றோம். சிவராத்திரி நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்ய அனுமதி தந்தார்கள். திருக்கேதீஸ்வரம் செல்ல முடியவில்லை. அதற்கு மாற்று ஏற்பாடாக பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் இருந்து சிவராத்திரி நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்தோம் கிடைக்கின்ற வாய்ப்புக்களை வீண்போகாமல் பயன்படுத்தி வருகின்றோம் என்று கூறினார்.

இப்போது காலைச் செய்தி அறிக்கைக்குப் பின் 'செய்தித்தான் கண்ணோட்டம்' என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது. இதற்கு பரவலாக பொது மக்களிடம் இருந்து வரவேற்புக் கிடைக்கிறது. பத்திரிகை வாசிக்கத் தெரியாத பாமரர்களும், பத்திரிகை வாங்கி வாசிக்க முடியாதவர்களும், இன்றைய பத்திரிகையை மறுநாளே வாசிக்கும் வாய்ப்பை பெறும் தூர இடங்களைச் சேர்ந்தவர்களும் பத்திரிகை வாசிக்க நேரமின்றித் தவிப்பவர்களும் இந்த நிகழ்ச்சி மூலம் பயனடைகின்றார்கள். ஆனால் கடைக்காரர்கள் இந்த நிகழ்ச்சியால் பத்திரிகை விற்

— 5-ம் பக்கம் பார்க்க

## உழைப்பால் உயர்ந்த மனிதர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் வீ. ஏ. திருஞானசுந்தரம் அவர்கள் 1955 ஆம் ஆண்டில் இருந்து 1961 ஆம் ஆண்டு வரை வீரகேசரியில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றியவர். 1961 முதல் 1979 வரை இலங்கைத் தாப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளர் நிர்வாக அதிகாரி, பிரசாரப் பொறுப்பதிகாரி எனப் பல பதவிகளை வகித்தவர்.

1980 ஆம் ஆண்டு முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர சேவையில் சேர்ந்து உதவி நிர்வாகப் பணிப்பாளராகவும், பின்னர் வர்த்தக முகாமைத்துறை மேலதிகப் பணிப்பாளராகவும் அதனைத் தொடர்ந்து மேலதிக தமிழ்ச் சேவைப் பணிப்பாளராகவும் பணி புரிந்தவர்.

1984 ஆம் ஆண்டு முதல் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராக கடமையாற்றி வருகின்றார் ஒலிபரப்புத்துறையில் பயிற்சி பெறுபவர்களுக்கு பயிற்சி வழங்குபவர்களுக்கான பயிற்சியையும், முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியையும், ஜப்பான், ஜேர்மனி, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பெற்றவர். மலேசியாவில் வானொலி தொலைக்காட்சி தொடர்பாக விசேட பயிற்சியையும் பெற்றிருக்கிறார்.

1956 இல் வானொலிக்குப் பிரதிகளை எழுதத் தொடங்கிய இவர் 1962 ஜூலை முதல் தேசிய சேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகி தனது திறமையை வெளிக்காட்டி படிப்படியாக தனது உழைப்பின் மூலம் பணிப்பாளர் பதவிக்கு உயர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பதவி வெற்றிடம்

இப்பல்கலைக்கழகத்தில் குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1990-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02-ம் திகதி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவிகள்:

1. கருவிப்பொறிவலர் தரம் (ii)
2. பாதுகாப்பு உத்தியோகத்தர் (தாழ்தரம்)
3. தொழிலாளி (தரம் (iii)
4. சுகாதாரத்தொழிலாளி (தாழ்தரம்)
5. தொழிலாளி (அமய)

சம்பளத்திட்டம்.

1. கருவிப்பொறிவலர்- (தரம் 11). ரூபா 1865- 11 × 40 - 2305 மாதமொன்றுக்கு
2. பாதுகாப்பு-உத்தியோகத்தர் (தாழ்தரம்) ரூபா 1775 - 8×30 - 2015 மாதமொன்றுக்கு
3. தொழிலாளி (தரம்111) ரூபா 1375- 5 × 30 - 1465 மாதமொன்றுக்கு
4. சுகாதாரத்தொழிலாளி (தாழ்தரம்) ரூபா 1775-8×30 2015 மாதமொன்றுக்கு
5. தொழிலாளி (அமய) ரூபா 55/- நாளொன்றுக்கு

(இவை தவிர அரசாங்கத்தினுல் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்)

தகைமைகள்.

1 கருவிப்பொறிவலர் (தரம்11)

1. குறைந்தபட்சம் 8 ம் வகுப்பில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
2. ''அமுக்கம்பதிகருவி'' போன்ற துல்லிய மானிகளைப் பராமரிப்பதிலும், திருத்துவதிலும், அரசாங்கத் திணைக்களமொன்றிலோ, அரசகூட்டுத்தாபனமொன்றிலோ, அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனமொன்றிலோ, குறைந்த பட்சம் ஐந்தாண்டு அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு: தொழிற்தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு:-தொழில் நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து பெறப் பட்ட தொழில் சான்றிதழை வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

2. பாதுகாப்பு உத்தியோகத்தர் (தாழ்தரம்)

1 எட்டாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. விளையாட்டிலும் சமூக சேவையிலும் தீவிரமாகப் பங்கு பற்றியிருத்தல் வேண்டும்.
3 உயரம்: 5அடி 6 அங்குலங்களுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். மார்பு: சாதாரண நிலையில் 32 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்
4. வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

தெரிவு: நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

3 உம் 5ம் தொழிலாளி (தரம்111) தொழிலாளி (அமைய)

1 ஏழாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

4. சுகாதாரத்தொழிலாளி (தாழ்தரம்)

1. மலசல கூடங்கள் வடிகால்கள் முதலியவற்றை சுத்தமான முறையில் பேணுவதில் திறமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
2. வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

தெரிவு: நேர்முகப் பரீடசை மூலமும் பொதுவுளசார்பறிப் பரீட்சை மூலமும்.

அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டிய 23 × 10 செ மீ அளவுடைய உறைகளை அனுப்பித் தபால் மூலமாக பெறவிரும்புவோர்,இப் பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ஸ்தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவான விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990 03.12

03155

### சர்வதேச ரீதியில் எழும்கேள்வி

# தேவிலால் ராஜினுமாவினுல் எதிர்விளைவுகள் என்ன?

(புதுடில்லி)

இந்தியத் துணைப் பிரதமர் திரு.தேவிலாலின் திடீர் ராஜினுமா அறிவிப்பு சர்வதேச அரசியல் அவதானிகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

எனினும் இவரது ராஜினுமாவைப் பிரதமர் திரு. வி. பி. சிங் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.

இவரது இந்த ராஜினுமா அரசாங்கத்தில் உட் பூசல்கள் தோன்றியிருப்பதை எடுத்துக் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனுல் திரு. சிங்கின் அரசு ஆட்டம் காணலாம் எனவும் சொல்லப்படுகிறது. ராஜினுமாவை பிரதமரிடம் ஒப்படைத்தபின் செய்தியாளரிடம் பேசிய திரு. தேவிலால் (வயது 75) தான் ஜனதா தள்ளிலிருந்து விலகவில்லை என்று சொன்னுர்.

தனது ராஜினுமாத்தொடர்பாக அவர் எவ்வித கருத்தையும் வெளியிட விரும்பவில்லை. சிலவாரங்களுக்குமுன்நிகழ்ந்த மாநிலத் தேர்தலில் அவரது மகன் மோசடிகளைச் செய்தார் என்ற குற்றச்சாட்டுகளை ஜனதாதள் தலைவர்கள் நிராகரிக்காது விட்டதால் திரு. தேவிலால் ராஜினுமாச் செய்ததாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேலும் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் 13 பேர் கொல்லப்பட்டனர். திரு. தேவிலாலின் மகன் திரு. லும். பிரகாஷ் சௌதாலா இங்கு வேட்பாளராக இருந்தார்.

திரு. தேவிலால் கடந்த டிசம்பர் மாதம் துணைப் பிரதமர் பதவியேற்றதும் அவரது ஹரியாணு முதலமைச்சர் பதவி திரு. சௌதாலாவுக்குக் கிடைத்தது.

இப்பதவியில் அவர் உறுதிப்படுத்துவதற்கு ஒரு தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டியிருந்தது.

முதலமைச்சராக அவர் பதவியேற்ற போது மாநிலச் சட்ட சபையில் அவர் அங்கத்துவம் பெற்றிருக்கவில்லை.

இது இவ்வாறு இருக்க, நேற்று நடைபெறவிருந்த ஜனதாதள் செயற்குழுக் கூட்டத்தில் திரு. தேவிலால் ராஜினுமாவினுல் ஏற்பட்டுள்ள நிலைபற்றி ஆராயப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

திரு. தேவிலாலின் ராஜினுமா முடிவை மாற்றப் பிரதமர் திரு. சிங்கும் ஏனைய அமைச்சர்களும் பகீரதப் பிரயத்தனம் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஜனசக்தி உதவி பெறுவோர்க்கு மின்விநியோகம் பெறக்கடன்

ஜனசக்தி உதவி பெறுவோருக்கு குறைந்த செலவில் கடன் அடிப்படையில் மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்படும் இதற்கான நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபை எடுத்துள்ளது.

கிராமிய மின் வழங்கல் திட்டத்தின்கீழ் ஜனசக்தி உதவி பெறுவோருக்கு மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்பட இருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின்சாரம் வழங்குவதற்கு தேவையான நிதியை மின்சார சபை வழங்கும். இப்பணம் ஐந்து வருடகாலத்தில் அறவிடப்படும்.

## தொலைக்காடசி...

பனை குறைந்து விடுகிறது என்று கருதுகின்றுர்கள், இது பற்றி பணிப்பாளரின் கருத்தைக் கேட்டபோது.

''பொதுமக்களிடம் இருந்து நல்ல வரவேற்பிருக்கின்றது. பத்திரிகை ஆசிரியர்களும் இந்த நிகழ்ச்சியை வரவேற்கின்றுர்கள். இப்போது அவர்களுடைய கருத்து நிலை எப்படி இருக்கின்தோ தெரியாது. பத்திரிகை விற்பனை குறைகின்றது என்பது உண்மைதான். அதனுல் நாம் இப்போது செய்தித்தாள் கண்ணேட்டம் செலுத்தும் முறையில மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம். செய்தித் தாள் கண்ணேட்டத்தைத் தொடர்ந்து செவிமடுப்போரால் இலகுவாக கண்டுபிடிக்கமுடியும்.

தொலைக்காட்சி – வானெலியைக் கேட்போர் தொகையைப் பாதித்துள்ளதா என்று கேட்டபோது;

தொலைக்காட்சியை கண்களால் ஓர் இடத்தில் இருந்து பார்க்கவேண்டும். ஆனுல் வானெலியை எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும் காதால் கேட்க முடியும். எனவே பாதிப்பு என்று கூறிவிட முடியாது.

புதிதாக வானெலிக்கு எழுதுபவர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

நன்ருக வாசிக்கவேண்டும், நாடகப் புத்தகங்களை வாசித்து எப்படி எழுதுவது என்று எழுதிப் பழக வேண்டும். வானெலி நாடகங்கள் எப்படி எழுதப்படுகின்றன என்பதனை கூர்ந்து அவதானிக்கப்படவேண்டும். நாம் அவ்வப்போது இளைஞர் மன்றம் போன்ற நிகழ்ச்சிகளில் நாடகம் எழுதுவது எப்படி என்று நேயர்களுக்கு விளக்கி வருகின்ருேம்.

இதை விட விடா முயற்சி, பொறுமை, என்பன மிகவும் முக்கியமாகும் என்று தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் ஆசிரியர் மாணவனுக்கு விளக்குவது போல எனக்கு விளக்க, அவருக்கு நன்றி கூறி அவரிடம் இருந்து விடை பெற்றதோடு இக் கட்டுரைவாயிலாக உங்களிடம் இருந்து மீண்டும் சந்திக்கும் வரை விடைபெறுவது, வி. என். எஸ். உதயசந்திரன். வணக்கம்! வாசகர்களே!

## நிதி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட மருதன் கேணி, சந்தை கட்டடம் திருத்தத்துக்கு ரூபா 75,000 மும் குடத்தனை உப அலுவலகக் கட்டடம் திருத்துவதற்கு ரூபா 90 000 மும் இவ்வருட புனர்வாழ்வு. புனரமைப்பு நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. (18)

# புனர்வாழ்வு அமைச்சு பிரதி செயலாளர் யாழ்ப்பாணத்தில்

யாழ்மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகளைப் பார்வையிடுவதற்காக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் சி லோகேஸ்வரன் யாழ்நகருக்கு விஜயம் செய்துள்ளார். (03)

# மன்னுர் முருகன் ஆலய புனருத்தாரணம்

மன்னுர் ஆதார வைத்திய சாலையில் அமைந்திருக்கும்முருகன் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன மன்னுர் பொதுமக்களின் உதவியினுல் இவ்வேலைகள் நடைபெற்று வருகின்றன.(17)

# மாத்தளையில் பொன்னுடை வழங்கி கௌரவம்

மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மாசி மகத் திருவிழாவை முன்னிட்டு பதினைந்து நாட்களாக சம்பூர்ண ராமாயணம் தொடர் விரிவுரை அங்கு இடம்பெற்றது. இவ்விரிவுரை நிகழ்த்திய கானகதாவாரிதி வண்ணை கந்தர்மடம் பிரம்மஸ்ரீ சிவ.வைநித்தியானந்த சர்மாவுக்கு அங்கு நடைபெற்ற பூர்த்தி விழாவில் பரிபாலனசபைத் தலைவர்பொன்னுடைபோர்த்தி கௌரவித்தார்புண்ணியசீலன் சர்மவுக்கும் பக்கவாத்தியம் வாசித்து சிறப்பித்த வயலின் வித்துவான் நேசவமூர்த்திக்கும், மிருதங்க வித்துவான் சர்மாவுக்கும் அங்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

# 90-வது நாள் நினைவஞ்சலி



அமரர்

திருமதி கணபதிப்பிள்ளை பாறுபதி

தோற்றம் 06. 09. 1918 — மறைவு 20. 12. 1989

திதி: அபர அட்டமி

நாங்கள் குடியிருந்த அன்புத் தெய்வமே, நீங்கள் மறைந்து 90 நாட்களாயினும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறேம்.

புலோலி தெற்கு,
புலோலி.

மக்கள்

03158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்-மட்டு இரவு பஸ் சேவை கொள்ளை காரணமாய் நிறுத்தம்

மட்டக்களப்புக்கான இரவு பஸ் சேவை விரைவில் இடம் பெறமாட்டாதென வடபிராந்திய போக்கு வரத்துச் சபை அதிகாரி ஒருவர் முரசொலிக்கு தெரிவித்தார்,

இரவு நேரங்களில் இடம் பெறும்கொள்ளைச்சம்பவங்களே இதற்குமுக்கியகாரணமாகஉள்ளது. சிறிது காலத்தின்பின் இச்சேவை ஆரம்பிக்கப்படலாம் என ஊகிக்கப்படுகின்றது. (03)

# தேவிலால் ராஜினமா வாபஸ்

(புதுடில்லி)

கடந்த வெள்ளிக்கிழமை தம் பதவியை இராஜினமா செய்த இந்திய துணைப்பிரதமர் தேவிலால் நேற்று தனது இராஜினமா செய்யும் திட்டத்தை கைவிட்டுள்ளதாக தெரிவித்தார்.

இவரின் இராஜினமாவை இந்தியப் பிரதமர் வி. பி, சிங் ஏற்றுக்கொள்ளாமையினலும் கட்சியின் ஏனைய பிரமுகர்களின் வற்புறுத்தல்களினலும் தேவிலால் தனது இராஜினமாவை வாபஸ் பெற்ருர்.

ஆளும் ஜனதாதள் கட்சியில் தேவிலாலுக்கு செல்வாக்கு அதிகம் என்ற காரணத்தினல் இவரின் இராஜினமா ஆட்சியை குலைக்கும் என அஞ்சப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# இஷ்டப்பட்டே நஷ்டப்படும் யாழ் மாவட்ட பேக்கரியாளர்

350 கிராம் பாண் தயாரிப்பதே நஷ்டம் என்ருலும் பொதுமக்களுக்காக நாம் 350 கிராம் பாண் தயாரிக்க தயாராக உள்ளதாக நேற்று நடைபெற்ற யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பாண் தயாரிக்கும் செலவினங்கள் மற்றும் நட்டங்கள் அடங்கிய அறிக்கையொன்று தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கும் இச் சங்கம் அனுப்பி வைத்துள்ளது. இது பற்றி ஏற்கனவே முரசொலி செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பேக்கரிகளுக்கு மா ஒழுங்காக வழங்கப்படாததால் கூட்டுறவு முறையிலான சங்கம் ஒன்று அமைப்பது பற்றியும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. யாழ். ப. நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒரு சில பேக்கரிகளுக்கு மட்டுமே மா வழங்கி வருவதாகவும் அதுவும் முற்பணம் கட்டினலேயே கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (03)

# நேற்று மினிபஸ் விபத்துக்கள் 15 பேர் காயம் ஒருவர் பலி

நேற்று கல்வியங்காடு சட்டநாதர் சிவன் கோவிலடியில் இடம்பெற்ற மினிபஸ் விபத்தொன்றில் 15 பேருக்குமதிகமானேர் படுகாயமடைந்துள்ளார்கள். அச்சுவேலியில் இருந்து வந்த மினிபஸ் இன்ஞெருவாகனத்தை முந்திய போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. காயமடைந்தோர் யாழ். வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை நேற்றுமாலை ஆஸ்பத்திரி வீதி கஸ்தூரியார் வீதி சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் மினிவான் விபத்தொன்றில் அப்துல்லா அஸிஸ் (33) என்ற இளைஞர் மரணமடைந்துள்ளார். (03)

### மேலதிக நேர…

செய்வார்கள் மேலதிக வேலை ஏதும் செய்ய மாட்டார்கள் என இச்சங்கத்தின் தலைவர் டாக்டர் டி.எம் எச். லியனகே தெரிவித்துள்ளார். (03)

### யாழ் மாநகரசபை...

கே, கே. எஸ், வீதியினூடாக பஸ்நிலயத்தை நோக்கி வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படும். நகரின் கிழக்குப் பகுதியில் இருந்துவரும் சகல வாகனங்களும் ஆஸ்பத்திரி வீதியினூடாகவே பஸ்நிலையத்தையடையும்.

தனியார் கொழும்புபஸ்கள் சிங்கள மகாவித்தியால முன்றலில் இருந்து தனது சேவையை ஆரம்பிக்கும் மினிபஸ்கள் முனீஸ்வரன் கோவில் பக்கம் தனது சேவை நடாத்த முன்னர் தரித்து நிற்கும்.

லொறிகள் சத்திரச்சந்தி பண்ணைப்பகுதியில் நிறுத்தப்படும்.

மேற்படி தீர்மானங்கள் யாவும் எதிர்வரும் 20 ஆம் திகதி அமுல்படுத்தப்படும், இந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை யாழ். மாநகரசபை ஊழியர்கள் மேற்கொள்வார்கள். இதற்கு சகல ஆதரவுகளை வழங்குமாறு பொதுமக்கள் கேட்கப்படுகிருர்கள், பொதுஸ்தாபனங்களும இளைஞர் அமைப்புகளும் மேற்படி கட்டுப்பாட்டு நடவடிக்கையை அமுல்நடத்த உதவவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாணமாவட்ட…

அருகில் உள்ள கிராம சேவையாளர் பிரிவில் நிறைவு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது தற்போது யாழ் மாவட்டத்தில் 435 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன (03)

### கொழும்பு…

போது பி.பி.ஸி நிருபர் அங்கிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. தீயினல் எவ்வித சேதமும் ஏற்படவில்லை, தீ பற்றிக் கொண்டதற்கான காரணம் இதுவரை தெரியவில்லை.

### அல்வாயில..

கான அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது. திரு. வி. விசுவாசம் தலைமையில் நடைபெறவுள்ளது இவ்வைபவத்திற்கு விடுதலைப் புலிகளின் வடமராட்சிமுன்னணிப்பிரமுகர்கள் பலரும் உரையாற்றுவார்கள்.

### வல்வெட்டித்துறையில…

வெடிகளை புதைத்து வைத்திருந்தனர்.

இந்த நிலக்கண்ணி வெடிகளை அகற்றுமாறு வல்வை பிரஜைகள் குழுவினர் காங்கேசன்துறை ஸ்ரீலங்கா இராணுவ முகாமைச்சேர்ந்த லெப்டினன்ட் கேர்ணல் நமுனுகுல விடம் கடந்த வியாழக்கிழமை கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கையை அடுத்து மக்கள் குடியிருப்பை அண்டியுள்ள பகுதிகளில் புதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணிவெடிகளை அகற்றுமாறு வடபகுதி இராணுவ உயரதிகாரி உத்தரவினைப் பிறப்பித்திருந்தார்.

இவ்வுத்தரவையடுத்தே சனிக்கிழமையன்று நிலக்கண்ணி வெடிகள் வெடிக்க வைக்கப்பட்டன. (3)

● நிதியமைச்சு அதிகாரிகள் வடபகுதி விஜயம்

# வடபகுதி நீதிமன்றங்கள் விரைவில் புனரமைப்பு

அண்மைக்கால வன்செயல்களின் போது சேதமடைந்த வடபகுதி நீதிமன்றங்கள் யாவும் விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக இவ்வாரம் கொழும்பில் இருந்து நீதி அமைச்சு அதிகாரிகள் குழுவினர் வடபகுதி நீதிமன்றங்களைப் பார்வையிட விஜயம் செய்கின்ருர்கள்.

யாழ்மாவட்ட நீதிமன்றக் கட்டடம் முற்ருகசேதமடைந்துள்ளது. இக்கட்டடம் தரை மட்டமாக்கப்பட்டே புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது,

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றக் கட்டடம் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை எனினும் இக்கட்டடம் நவீனமயப்படுத்தப் படவுள்ளதாகவும் தெரியவருகின்றது, (03)

# புனர்வாழ்வு அமைச்சர் விரைவில் யாழ் விஜயம்

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் திரு வின்சென்ட் பெரேரா யாழ் மாவட்டத்திற்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளார்,

கடந்தவாரம் அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு சி, லோகேஸ்வரன் விஜயம் செய்திருந்தார், இவர்களதுவிஜயத்தினல் யாழ் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகள் துரிதப்படுத்தப் படவுள்ளன. இம்மாத இறுதியில் அமைச்சர் யாழ்நகருக்கு விஜயம்செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது, (03)

# யாழ் போதனவைத்தியசாலைக்கு இரு குளிரூட்டும் இயந்திரங்கள்

யாழ் போதன வைத்தியசாலை சத்திரசிகிச்சைப்பிரிவுக்கு இரு குளிர் சாதன இயந்திரங்கள்வரவுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது குளிர் சாதன இயந்திரமின்றி சத்திர சிகிச்சை பிரிவு இயங்க முடியாதுள்ளதாக முரசொலி செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதிகவலு இல்லாதஇயந்திரமே வரவுள்ள போதும் தற்காலிகமாக தேவையை இவை பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முற்ருக குளிர்சாதன இயந்திரம் பொருத்தப்பட 50 லட்சரூபா தேவைப்படும் மேற்படி இரு இயந்திரங்களின் பெறுமதி ஆறு லட்ச ரூபா வாகும்.

மேற்படி இயந்திரம் கொழும்புத்துறை முகத்தில் இருந்து இங்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் இவை இங்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது (03)

# அன்னை பூபதியின் நினைவுதினம் வடக்கு கிழக்கில் அனுஷ்டிப்பு

தமிழீழப் பிரதேசங்களின் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தால் தமிழீழ ஆக்கிரமிபபு வேலைகள் வ்ஸ்தரிக்கப்பட்ட ஒரு நெருக்கடியான காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற யுத்தநிறுத்தம், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை ஆகியஇருகோரிக்கைகளை முன்வைத்து அன்னைபூபதி மட்டக்களப்பில் உண்ணாவிரதமிருந்துவீரமரணமடைந்தார்.

அன்னை பூபதியின் சாகும் வரையான உண்ணாவிரதம் எமது விடுதலைப் போராட்டத்தில் ஒரு அத்தியாயமே. அன்னை உண்ணாவிரதம் ஆரம்பித்த (19.03.88) வீரமரணம் அடைந்த (19 04.88) ஒரு மாத காலம் வரை அன்னை பூபதியின் நினைவு தினமாகவும் எழுச்சித் தினமாகவும் எமது பிரதேசமெங்கிலும் அனுஷ்டிக்கப்படவுள்ளது என்று புலிகளின் மக்கள் முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

நினைவுக் கொண்டாட்டங்களாக அன்னைபூபதியின் நினைவஞ்சலிக்கூட்டங்களும் அன்னையின் உருவப் பந்தல்களும் அமைக்கப்படும். சிரமதான வேலைகளை மேற்கொள்ளும். எமது பிரதேசங்களிலுள்ள அனைத்து அமைப்புக்களும், நிறுவனங்களும் அன்னையின் நினைவாக நினைவுப்பிரசுரங்கள் வெளியிட்டும் சுழற்சிமுறையிலானஉண்ணாவிரதங்களை மேற்கொண்டும் இறுதி நாளன்று அன்னையின் நினைவுச் சின்னச் சிலை அமைத்து மாபெரும் அஞ்சலிக்கூட்டம் பிரதேசமட்டத்திலே இடம்பெறும். இந்த வகையில் அன்னை பூபதியின் நினைவுக் கொண்டாட்டங்களில் பங்கெடுத்து அவரின் தியாகபயணத்திற்கு அஞ்சலி செலுத்துவோமாக இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த அன்னை பூபதி அவர்களின் நினைவு தினத்தையடுத்து இன்றுமுதல் வாகரை தொடக்கம் ஒவ்வொருகிராமங்களிலும்சுழற்சி முறை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டுளளது.

மாணவர் அமைப்புக்கள் எதிர்வரும் 26-ம்திகதி வெபர் அரங்கில் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளனர்.

இறுதிநாளான ஏப்ரல்19-ம் திகதி கருவேப்பங்கேணி வீடமைப்புத் திட்டத்தை அன்னை பூபதிசதுக்கம் எனவும் அருகிலுள்ள வீதிக்கு அன்னைபூபதி வீதி எனவும் பெயர்சூட்டுவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்று மட்டு இந்துக்கல்லூரியில் அஞ்சலிக்கூட்டமும் நடைபெறும். (05)

### மாத்தயா ..

காலங்களில் நிகழ்திய போராட்டத்திற்கு உறுதுணையாக நின்ற மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

நேற்றுபுலிகளின் ஆலோசகர் திரு. பாலசிங்கம் தமது பாரியார் சகிதம் வடமராட்சி மக்களை சந்தித்து உரையாடினர்.

### 22-ல குடாநாடு...

சினை காரணமாக மாகாண சபையைக் கலைக்க முடியாது உள்ளதால், இந்திய அரசு மூலமாக மாகாணசபையைக் கலைக்குமாறு வடகிழக்கு மாகாணசபை முன்னள் முதல்வர் வரதராஜப் பெருமாளுக்கு நெருக்கடியை ஏற்படுத்த உத்தேசித்துள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இலங்கை இந்திய அரசுகளுக்கிடையில் உள்ள புரிந்துணர்வின் அடிப்படையில் இந்திய அரசு வரதராஜப் பெருமாளிடம் மாகாணசபையைக் கலைக்குமாறு வற்புறுத்தும் எனவும் அவ்வட்டாரங்களில் இருந்து நம்பகரமாகத் தெரியவருகிறது.

### மட்டுமாவட்ட…

குவரத்திற்கான கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தனர். எனினும் மக்கள் இவ்வொழுங்குகளைப் பேணுவதில் அசிரத்தை காட்டிவந்தனர்.

இதனுலேயே நேற்றுமுதல் விடுதலைப்புலிகளும் இவ்வொழுங்கு விதிகளைக் கண்காணிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இக்கண்காணிப்பின்போது விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் காணப்பட்டனர் எனினும் இலங்கைப் பொலிஸார் எவ்வித ஆயுதங்களையும் வைத்திருக்கவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது. (05)

### வடகிழக்கில் ..

இருந்தே எதிர்த்தேன் என்ன தான் கருத்து வேறுபாடு, முரண்பாடுகள் இருப்பினும் வெளிநாட்டுப் படையை இங்கு அழைப்பது தவருன காரியமாகும்

விடுதலைப்புலிகளை பேச்சுக்கு அழைத்தோம் எமக்கிடையே இருந்த ஒற்றுமையின்மையே அந்நியர் தலையீடுக்கு வழி வகுத்தது. புலிகளும் சரியான கண்ணேட்டத்தில் செயற்படுகின்றனர், நல்லெண்ண அடிப்படையில் அவர்களும் பேச்சுக்கு வந்துள்ளனர்,

எமது நல்லகாலமோ என்னவோ இந்தியாவிலும் ஏற்பட்ட அரசியல் தலைமை மாற்றமும் எமக்கு சாதமாகியது, என ஜனதிபதி மேலும் தெரிவித்தார்.

### மொத சம்பளத்தை...

சேவைக் காலம் உடைய ஊழியர்களுக்கு பிணையாளர்கள் தேவையில்லை ஏனைய ஊழியர்களுக்கு ஐந்து வருடகாலத்திற்குகுறையாதசேவையுடைய பிணையாளர் தேவைப்படுவர்.

சம்பளத்தில் பத்து சதவீதம் என்ற அடிப்படையில் மாதாந்தம் இந்தக்கடன் தொகை தவணை அடிப்படையில் அறவிடப்படும்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 19-03-1990ல்] அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org